பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 08 2026 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரயில் பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

2. பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுச்சூழல் பணிக்குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

3. ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் தீரஜ் சேத் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றுள்ளார்.

4. மேற்குவங்கம் மற்றும் ஒடிசாவின் சில இடங்களில் இன்று அதிகன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் தில்லி, ஈஸ்ட் பெங்கால் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ரயில் பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

500க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களில் குடிநீரின் தரம் குறித்து கணக்குத் தணிக்கை துறை வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து அதுகுறித்து ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆய்வு மேற்கொண்டார்.

பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் தூய்மையான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

இதன் ஒரு பகுதியாக ரயில்வே கட்டமைப்பு முழுவதும் சுமார் 20 ஆயிரம் இடங்களில் புதிய நீர் சேமிப்பு தொட்டிகள் அமைக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

வழக்கமான நீர் தர பரிசோதனைகளை துல்லியமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடப்படும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கணக்குத் தணிக்கை அலுவலகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் களையப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே அமைச்சகம் உறுதியளித்துள்ளது.

<<<<>>>>

பிரிக்ஸ் சுற்றுச்சூழல் பணிக்குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இதில் பிரிக்ஸ் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்று நிலையான வளர்ச்சி, பருவநிலை மாற்றம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்க உள்ளனர்.

சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான முன்னுரிமைகள் குறித்தும், சுழற்சி பொருளாதாரம், பேரிடர் மேலாண்மை, காட்டுத் தீ தடுப்பு உள்ளிட்டவை குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

நாளை பிரிக்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் தீரஜ் சேத் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றுள்ளார்.

இன்று அவர் நேபாள ராணுவ தலைமை தளபதியுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

அதனைத் தொடர்ந்து நாளை சிவபுரியில் உள்ள நேபாள ராணுவ அகாடமியில் பயிற்சி அதிகாரிகளிடையே உரையாற்ற உள்ளார்.

ஜெனரல் தீரஜ் சேத்தின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான ராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய பணியாளர் நலத்துறை சார்பில் வழங்கப்படும் அனுபவ் விருதுகளை புதுதில்லியில் மத்திய பணியாளர் நலன் மற்றும் ஓய்வூதியத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று வழங்குகிறார்.

ஓய்வூதியப் பலன்களைப் பெறுவது குறித்த கலந்தாய்வுப் பயிலரங்கத்தையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

<<<<>>>>

முக்கிய கனிமங்களின் 8வது கட்ட ஏலம் குறித்த பயிலரங்கமும், விளக்க நிகழ்ச்சியும் பட்னாவில் இன்று நடைபெறுகிறது.

இதனை மத்திய சுரங்கத்துறை இணையமைச்சர் திரு. சத்தீஷ்சந்திர தூபே இன்று தொடங்கி வைக்கிறார்.

கிராஃபைட், கேலியம், டங்ஸ்டன் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கனிமத் தொகுதிகளின் ஏலம் குறித்து இதில் விளக்கப்படும் என நிலக்கரி அமைச்சம் கூறியுள்ளது.

இதில் சுரங்க அமைச்சகம், இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள், தொழில்துறையினர் மற்றும் முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

பிஹாரில் புதிதாக 100 நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

ஜமுய் பகுதியில் புதிய பேருந்து நிலையத்தை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், சாலைப் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தவும், மக்களுக்கு

நவீன வசதிகளை வழங்கவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

100 புதிய பேருந்து நிலையங்களைக் கட்டமைக்கும் மாநில அரசின் நடவடிக்கை பிஹாரின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

மின்சாரம், கல்வி, சுகாதாரம், தொழில்துறை என அனைத்து துறைகளின் மேம்பாட்டுக்காகவும் அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு. சாம்ராட் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாய் நல்லாட்சிக்கான உதாரணமாக திகழ்ந்ததாக மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

வாஜ்பாயின் 25 அடி உயர சிலை நிறுவும் பணிகளுக்கு இந்தூரில் நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. மோகன் யாதவ், சுமார் 2 கோடி ரூபாய் செலவில் இந்த சிலை அமைக்கப்படும் என்றார்.

இச்சிலை சிறந்த நிர்வாகம் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு அடையாளமாகத் திகழும் என்று அவர் தெரிவித்தார்.

இச்சிலை ஒரு அடையாளச் சின்னமாக மட்டுமல்லாமல் வாஜ்பாயின் கருத்துகளை வருங்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்ப்பதாக அமையும் என்று திரு. மோகன் யாதவ் கூறினார்.

<<<<>>>>

நாடு முழுவதும் கடந்த 9ஆம் தேதி தொடங்கிய இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கம் இன்றுடன் நிறைவடைகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தேசியக் கொடி பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

ஹரியானாவின் கர்னூலில் நடைபெற்ற தேசியக்கொடி பேரணியை மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தொடங்கி வைத்தார்.

Pallbghar-ல் நடைபெற்ற பேரணியில் மத்திய இணையமைச்சர் திரு. கிஷன்பால் குர்ஜார் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சத்தீஸ்கடில் நக்சல் தீவிரவாதம் முற்றிலும் ஒடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் உற்சாகமாக நடைபெற்றன.

மாநிலத்தில் நக்சல் பாதித்த கிராமங்களில் பல இடங்களில் முதல் முறையாக தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

இதனிடையே பஸ்தர் பகுதியில் நக்சலைட்களாக இருந்து சரணடைந்தவர்களின் மறுவாழ்வுக்காக ஏராளமான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijyakumar - 118 Sec)

<<<<>>>>

மேற்குவங்கம் மற்றும் ஒடிசாவின் சில இடங்களில் இன்று அதிகன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், சத்தீஸ்கட், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, பிஹார், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக ஒடிசாவின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

பாலாசோர், மயூர்பஞ்ச் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

இம்மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

293 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு உதவி வழங்கப்படுகிறது.

கேந்திரபாரா, பூரி ஆகிய மாவட்டங்களிலும் தொடர் மழை பெய்து வருகிறது.

மயூர்பஞ்ச், பத்ரக், கியோஞ்சர் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் தில்லி, ஈஸ்ட் பெங்கால் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தில்லி அணி, Raengdai அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி, ராணுவ அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

<<<< >>>>